**கொ.மு.சுட்டெண்**
**2021 யூன்**

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

**புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

## தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் யூனில் மீட்சியடைந்தன

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் பாதகமான தாக்கங்களிலிருந்து தயாரிப்பு நடவடிக்கைகள் 2021 யூன் காலப்பகுதியில் சிறிதளவு மீட்சியடைந்தன.** புதிய கட்டளைகளில் காணக்கிடைத்த வலுவான மீட்சியின் மூலம் பிரதானமாகத் தூண்டப்பட்டு தயாரிப்பு முகாமையாளர் சுட்டெண், முன்னைய மாதத்திலிருந்து 8.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பொன்றுடன் 2021 யூனில் 50.4 சுட்டெண் பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது. நிரம்பலர் விநியோக நேரம் தவிர்ந்த ஏனைய அனைத்து துணைச் சுட்டெண்களும் முன்னைய மாதத்திலிருந்து முன்னேற்றங்கண்டன.

புதிய கட்டளைகள், விசேடமாக உணவு மற்றும் குடிபானங்கள் துறையிலுள்ளவை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையிலிருந்து தோன்றிய இடையூறுகள் காரணமாக பிரதானமாக, உணவு மற்றும் குடிபானத் துறையுடன் தொடர்புபட்ட உற்பத்தி, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் முன்னேற்றங்கண்டன. இருந்தும் நடுநிலையான அடிப்படை மட்டத்திற்குக் கீழ் காணப்பட்டன. எனினும், புதிய கட்டளைகள், தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்களில் மேலும் வீழ்ச்சியிலிருந்து பிரதிபலிக்கப்பட்டவாறு புடவை மற்றும் அணியும் ஆடைத் துறை யூனில் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **42.1** | **50.4** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 42.4 | 52.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| உற்பத்தி | 27.9 | 43.2 | - | சுருக்கமடைகின்றது மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 38.4 | 45.8 | - | சுருக்கமடைகின்றது மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 36.0 | 45.3 | - | சுருக்கமடைகின்றது மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 73.8 | 68.9 | + | நீட்சியடைகின்றது மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


உள்நாட்டு நோக்கில், பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் நிரம்பலர் விநியோக நேரம் 2021 யூனில் குறைவான வேகத்திலேனும் தொடர்ந்தும் நீட்சியடைந்தது. எவ்வாறாயினும், இறக்குமதி நோக்கங்களுக்காக வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலும் நாணயக் கடிதங்களைத் திறப்பதிலும் தாம் தாமதங்களை எதிர்கொண்டதாக அளவீட்டிற்கான பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்ட அதேவேளை வெற்றுக் கொள்கலன்கள் பற்றாக்குறை உச்சமடைந்தமையினால் கப்பலேற்றுதலுக்கான இடவசதியினை ஒதுக்கிக் கொள்வதில் நாம் தொடர்ச்சியாக இடர்பாடுகளை எதிர்கொண்டதாக பொருட்கள் ஏற்றுமதியில் ஈடுபடுகின்றவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாடு முழுவதும் குறிப்பாக மேல் மாகாணத்தில் கொவிட்-19 தடுப்பு மருந்தேற்றல் துரிதமாக மேற்கொள்ளப்பட்டமை அத்துடன் நடமாட்டுக் கட்டுப்பாடுகள் தளர்த்தபட்டமையின் மூலம் துணையளிக்கப்பட்டு வரவிருக்கும் மாதங்களில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்பும் என்ற எதிர்பார்க்கையுடன் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.

**தயாரிப்பு கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**50.4**

2021 மேயுடன் ஒப்பிடுகையில் 8.3 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2021 மேயிலிருந்து 0.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியொன்றுடன் 2021 யூனில் 55.5 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தயாரிப்பு கொ.மு.சுட்டெண்கள் உயர்வான வீதத்தில் அதிகரித்த அதேவேளை ஐக்கிய அமெரிக்காவின் கொ.மு.சு அதே வீதத்தில் அதிகரித்தது. மேலும், ஐக்கிய இராச்சியம், மற்றும் சீனா ஆகிய நாடுகளின் சுட்டெண் பெறுமதிகள் குறைவான வேகத்தில் அதிகரித்தன. அதேவேளை, இந்தியா மற்றும் ரஷ்யா என்பன 2021 யூனில் தயாரிப்பு கொ.மு.சுட்டெண்களில் சீர்குலைவொன்றினைச் சுட்டிக்காட்டின.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 யூலை 14இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண் தொடர்ச்சியாக இரண்டு மாதங்களாக வீழ்ச்சியடைந்ததன் பின்னர் 51.3 கொண்ட சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து 2021 யூனில் வளர்ச்சி எல்லைக்கு திரும்பியது.** இம்மேம்படுகை பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையினால் துணையளிக்கப்பட்டு நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகளில் அதிகரிப்பின் மூலம் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது.

புதிய வியாபாரங்கள் துணைச் சுட்டெண்ணானது குறிப்பாக கல்வி மற்றும் நிதியியல் பணிகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் 2021 மேயுடன் ஒப்பிடுகையில் 2021 யூனில் மேம்பட்டன. எனினும், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத் துறைகள் மாதகாலப்பகுதியில் வீழ்ச்சிகளை அவதானித்தன.

மாதத்தின் பிந்திய பாகத்தை நோக்கி பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமைக்கமைக்கிணங்க யூனில் வியாபார நடவடிக்கைகள் துணைத் துறைச் சுட்டெண் மேம்பட்டது. அதற்கமைய, காப்புறுதி, கல்வி, தொழில்சார் பணிகள் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகள் மாதகாலப்பகுதியில் அதிகரிப்புக்களை அவதானித்தன. எவ்வாறிருப்பினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் பரவலின் காரணமாக அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்புபட்ட கேள்வியில் சரிவுடன் மொத்த, சில்லறை வர்த்தகம், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துறைகள், தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.

தொழில் தேவைப்பாடுகள் சுருங்கியமைக்கேற்ப புதிய ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தப்பட்டமைக்கு மத்தியில் ஓய்வுபெறுதல், பதவிவிலகுதல் காரணமாக யூனில் தொழில்நிலையானது மெதுவான வேகமாயினும், தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.

நாடளாவிய பயணக் கட்டுப்பாடுகள் நீடிக்கப்பட்டமை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் முடக்கல்கள் போன்றவற்றுக்கு மத்தியில் வியாபாரத் தொழிற்பாடுகள் மீதான இடையூறுகளின் காரணமாக நிலுவையிலுள்ள பணி யூனில் மேலும் உயர்வடைந்தது.

| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **39.5** | **51.3** | + | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய வியாபாரங்கள் | 36.3 | 49.0 | - | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கை | 28.9 | 49.0 | - | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 32.8 | 46.1 | - | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 60.9 | 54.2 | + | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 38.6 | 58.3 | + | வீழ்ச்சியிலிருந்து, அதிகரிக்கின்றது |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மூலம் மீள்வலுப்பெற்ற சாதகமான எண்ணப்பாங்குகளுடன் அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகள், மேயிலிருந்து படிப்படியாக அதிகரித்தன. அதேவேளை, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பில் சில பதிலிறுப்பாளர்கள் அவர்களது கரிசனைகளை வெளிப்படுத்தினர்.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 51.3**

**2021 மேயுடன் ஒப்பிடுகையில் 11.8 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, உலகளாவிய பணி நடவடிக்கைகளில் மேலதிக விரிவடைதலொன்றினைச் சமிக்ஞைப்படுத்திய போதிலும் 2021 மேயின் 59.6 இலிருந்து 2021 யூனில் 57.5 இனைப் பதிவுசெய்தது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 யூனில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்ததை எடுத்துக்காட்டிய அதேவேளை, இந்தியா மற்றும் யப்பானின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியன.

*(மூலம்: மார்க்கிட்[1], யூலை 14, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.